**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 66/2022**
**Prosecution Witness**:3

| Name | **சின்னன்னன்** (PW3) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd **day of July 2026** by G.Kiruthiga Bench Clerk Grade III, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present. )***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது கணபதிபாளையம், திருவள்ளுவர் காலனியில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 29.06.2021ம் தேதி மாலை 05.00 மணி சுமாருக்கு நடுப்பாளையம் உரக்கடையில் நடந்த திருட்டு சம்பந்தமாக உரக்கடைக்காரர் சுந்தரவடிவேல் என்பவரும் மலையம்பாளையம் காவல்நிலையத்திற்கு சென்றிருந்தபோது பிரபாகரன் மற்றும் ஒரு நபரை சாலைபுதூர் பெட்ரோல் பங்க் அருகில் உள்ள பைனான்ஸில் நடந்த திருட்டு சம்பந்தமாக நிலையத்தில் வைத்து போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள், அதில் ஒருவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிதான். அவர்கள் சாலைபுதூர் பைனான்ஸில் திருடியதை ஒப்புக்கொண்டார்கள். அதை போலீசார் எங்கள் முன்பு பதிவு செய்தார்கள், என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் தினகரன் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை நகலில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

நான் எத்தனை தாளில் கையொப்பம்செய்தேன் என்றால் ஒரு தாளில் தான் கையொப்பம் செய்தேன். மேற்படி கையொப்பத்தை நான் காவல்நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால் சரிதான். அப்போது காவல்நிலையத்தில் எத்தனை போலீசார்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.23 15:00:54 +0530

இருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. அங்கு எத்தனை காவல்நிலையத்தில் இருந்து போலீசார் வந்திருந்தார்கள் என்றால் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் இருந்து மட்டும் போலீசார் வந்திருந்தார்கள். நான் காவல்நிலையத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் 1 மணி நேரம் இருந்திருப்பேன். காவல்நிலையத்தில் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தது சம்பந்தமாக எத்தனை நபர்களை பிடித்துவைத்திருந்தார்கள் என்றால் 2 பேரை பிடித்துவைத்திருந்தார்கள். மேற்படி இரண்டு பேரும் எத்தனை குற்ற வழக்குகளில் ஈடுபட்டார்கள் என்று சொன்னார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. போலீசார் எழுதி வைத்திருந்த தாளில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். உரக்கடை வைத்துள்ள சுந்தரவடிவேல் எனக்கு நண்பர் என்றால் சரிதான். மேற்படி உரக்கடையில் திருட்டு நடந்தபோது நானும் அங்கு தான் இருந்தேன் என்றால் சரிதான், நானும் சேர்ந்து தான் எதிரிகளை பிடித்தோம். மேற்படி வழக்கு சம்பந்தமாகவும் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சாட்சியத்தில் நான் சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளிடம் ரூ.8,800/- கைப்பற்றினார்கள் என்றும் அதற்கு நான் சாட்சி கையொப்பம்செய்துள்ளேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல, காவல்நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் செய்தேன். உரக்கடை சுந்தரவடிவேல் எனக்கு நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதால் இந்த வழக்கிற்கும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.23 15:00:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.